**மெத்ததும்பற பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெத்ததும்பற பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெத்ததும்பற பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் நிர்மாணங்கள், வாகன திருத்தங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 27,741,516 மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நாறன்கொள்ள வத்த ஏலக்காணியில் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த ரூபா 4,150,000 ஆன 01 ஏக்கர் 6.6 பேர்ச் காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் மூலதன மானிய கிடைப்பளவு அந்த கூட்டுத்தொகை ரூபா.37,987,464 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது பாதீட்டு அறிக்கையில் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என்பதாக். | மேற்படி |
| (ஈ) | மீளாய்வாண்டின் மூலதன செலவினம் ரூபா 15,761,191 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பாதீட்டு அறிக்கையில் மூலதன செலவினங்களுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை என்பதாக. | மேற்படி |

## 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 02 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயம் ஒன்றின் மீதிகளின் கூட்டுத்தொகை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 15,479,267 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நூலகப் புத்தகங்கள் மற்றும் பொது வைப்புகளில் இணக்கமின்மையை எதிர்வரும் ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகள் இனங் காணப்பட்டு அட்டவணைகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6.3 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,304,632 ஆன 03 சொத்து விடயங்கள் மற்றும் சொத்து விடயம் ஒன்றிற்குரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்பதிகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது. | குழு நியமிக்கப்பட்டு மீதிகளைக் கண்டுபிடித்து தீர்வு செய்து கொள்வதாக கணக்கு. | கணக்கு விடயங்களுக்காக உரிய பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமிண்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ) 1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கால்நடை கொல்லும் கட்டளைச் சட்டம்** | | | |
| 4 (1), 06 மற்றும் 10 ஆம் பிரிவுகள் | சபைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு இறைச்சிக் அறுவை கூடம் மற்றும் 02 மாட்டிறைச்சி கடைகள் பிணை உறுதி பத்திரங்களில் கையொப்பமிடாமலும் அனுமதிப் பத்திரங்களைப் பெறாமலும் இயங்கி வந்தன. மேலும், உயிர் நீக்கம் செய்யப்பட்ட மாடுகளை பிரதேச சபையில் முன்கூட்டியே பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | சட்டவிரோதமாக நடத்தப்படும் மாடு கொல்லுமிடம் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 104(4) | மீளாய்வாண்டின் இறுதி திகதி உள்ளவாறு 8 கணக்கு மீதிகளுக்காக அறவீடுகள் மற்றும் தீர்வு செய்தல் மேற்கொள்ளாமை தொடர்பாக இடம்பெற்ற பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு மொத்தம் ரூபா 14,070,204 ஆன நட்டங்கள் அறவிடப் பட்டிருக்கவில்லை. | பரிசோதனை விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதாக. | நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2024 ஏப்ரல் 22 ஆந் திகதிய 4/4/ பொறியியலாளர் பொது இலக்க உள்ளூராட்சி மன்ற பொறியலாளரின் சுற்றறிக்கையின் 13 ஆம் 15 பிரிவுகள் | மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா .4,070,000 தொகை செலவிடப்பட்டு நிறை வேற்றப்பட்ட 6 அபிவிருத்தி திட்டங்களுக்குரிய தர பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | உரிய தரப் பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,381,984 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,122,302 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 1,881,894 | 3,444,010 | 3,443,038 | 819,725 | 1,881,894 | 2,126,773 | 2,329,773 | 818,753 |
| (ii). வாடகை | 3,839,400 | 6,414,996 | 5,153,940 | 2,790,114 | 3,839,400 | 3,901,286 | 4,628,568 | 1,529,058 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,150,225 | 4,572,271 | 4,572,271 | - | 3,150,225 | 3,648,165 | 3,696,215 | |
| (iv). ஏனைய வருமானம் | 31,032,187 | 44,407,533 | 63,831,492 | 20,178,398 | 31,032,187 | 48,192,037 | 29,691,524 | 39,602,357 |
| மொத்தம் | 39,903,706 | 58,838,810 | 77,000,741 | 23,788,237 | 39,903,706 | 57,868,261 | 40,346,080 | 41,950,168 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 67 நபர்களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 107,597 ஆன ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வீதவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 927,765 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 15,797,994 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிட முடியாத பணம் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படுவதாக. | பெற வேண்டிய வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 ஆம் வரையான பிரிவுகளின் பிரகாரம் மலப் போக்குவரத்து மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுதல் பிரதேச சபையால் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் கலி வண்டி சேவையொன்றை ஆரம்பிப்பதற்கும் மல சுத்திகரிப்பு பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கும் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கலி வண்டி சேவை யொன்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான காணி யொன்று இல்லையென தெரிவிப்பதுடன் அவ்வாறு தொழில்நுட்ப மற்றும் நிதி இயலளவு இல்லையென்பதாகவும். | அதிகார பிரதேசத்தில் உள்ள மக்களின் பொது சுகநலன்களுக்காக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான 04 நீர் ஆதாரங்களின் நீர் தர பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் நீரில் இருக்க வேண்டிய அளவை விட பக்டீரியாக்களின் அளவு அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாலும், சபை சம்பந்தப்பட்ட நீர் ஆதாரங்களில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொதுமக்களுக்கு பொது கொதித்தாரிய நீரை பருகுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் மூலம் அறிவுறுத்துத்தல்கள் வழங்கியுள்ளதாக. | நீர் ஆதாரங்களில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க ஒரு முறைமையை நிறுவ வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 39,783,826 ஆக இருந்ததுடன். அதில் 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மீதியின் மொத்தம் ரூபா 1,185,899 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 12,011,016 ஆக இருந்தது. | பரிசோதனைகள் செயற்படுத்தப்படுவதாகவும் வீதவரி, ஏக்கர் வரி என்பவற்றிறகாக நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடமாடும் சேவைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | விரைவில் அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 65,803,102 ஆக இருந்தது. அதில் 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 5,074,300 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா. 18,057,540 ஆகவும் இருந்தது. | குழு ஒன்று நியமிக்கப்பட்டு ள்ளதுடன் பரிசோதனை அறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறை பயன்பாட்டிலான ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மொத்தம் ரூபா 16,962,500 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 02 வாகனங்கள் 02 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | வாகனங்களின் உரித்தினை கையேற்று ஏலவிற்பனை செய்வதற்கும் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும். கைதவிர்க்க வேண்டிய வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 ஒப்பநந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்காக வீதி நியம விலை விகிதம் திருத்தம் செய்யப்பட்டிருக்கையில் முன்னைய ஆண்டின் முதல் அரையாண்டு விகிதத்தின் பேரில் அடிப்படையில் 23 வீதிகள் மற்றும் வடிகால் நிர்மாண அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு மதிப்பீடு தயாரித்த காரணத்தினால் மொத்தம் ரூபா 522,056 தொகை கூடுதலாக செய்யப்பட்டு இருந்தது. | 2023 இரண்டாம் அரையாண்டில் திருத்திய வீதி நியம விலை விகிதம் (HSR) கிடைத்திருக்காமை மற்றும் கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | திருத்திய வீதி நியம விலை விதங்களின் பேரில் மதிப்பீடு தயாரித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் கூடுதலான கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 03 செயற் திட்டங்களில் வடிகாணுக்காக வடிவமைப்பு பலகைகள் (Form work) இடும் போது பயன்படுத்தப்பட வேண்டிய வீதி நியம விகிதம் ST-112 பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ST 64 பயன்படுத்திய காரணத்தினால் ரூபா 233,046 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | வடிவமைப்பு பலகை இடும்போது ஆதாரம் இடுவதற்கு வேராக பணம் சேர்க்கப்பட வேண்டும் என்பதாக | உரிய வீதி நியம விலை விகிதத்தை பயன்படுத்தப வேண்டும் |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 10 பதவிகளில் 20 வெறறிடங்கள் அவதானிக்கப்பட்டன. | அனைத்து ஆட்சேர்ப்பையும் இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால் ஆரம்ப தரத்தின் அனைத்து பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நிறுத்தப் பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து சபையின் நடவடிக்கைகளை சேர்த்துள்ளதாக பேணி செல்ல வேண்டும். |